# அசுத்தமான உணவகங்கள் மூடப்பட்டன



கோலாலம்பூர், மே 10-

மாநகர் முழுவதும் ஏராளமான உணவகங்களில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. சுத்தமின்றி மிக மோசமான நிலையில் காணப்பட்ட ஓர் உணவகம் மூடப்பட்டது. 69 உணவகங்களுக்கு சம்மன்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் மிட்வேலி மெகாமால், ஜாலால் ஹுஜான் ஹேமாஸ், ஜாலான் ஹுஜான் ரஹ்மாட், ஜாலான் மெட்ரோ புடு, லாலாபோர்ட் புக்கிட் பிந்தாங், சன்வே புத்ரா மால் ஆகிய பகுதிகளில் இந்த சோதனைகள் நடத்தப்பட்டன.

மிக மோசமான நிலையில் அசுத்தமாக காணப்பட்ட ஓர் உணவகத்தை உடனடியாக மூடும்படி கோலாலம்பூர் மாநகராட்சி மன்ற அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

உணவு சட்டம் செக்‌ஷன் 11 விதியின் கீழ் இந்த முடிவு எடுக்கப்பட்டது. மேலும் பல்வேறு காரணங்களுக்காக 69 உணவகங்களுக்கு சம்மன்கள் வழங்கப்பட்டன. இனி மேலும் இதுபோன்ற சோதனைகள் தொடர்ந்து நடத்தப்படும் என்று தமது முகநூலில் வெளியிட்ட செய்தியில் கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் கூறியது.